அ.வ.எண்: 119/2021 நாள்:16.11.2022

வா.சா.1. ஜெயராஜ்

**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காகவும் சொத்தின் முழு உரிமையும் எனக்கு தான் என்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கும் எனக்கும் என்ன உறவு முறை என்றால் 1,2,3 பிரதிவாதிகள் அனைவரும் என் உடன் பிறந்த சகோரரிகள் ஆவார். 4வது பிரதிவாதி 3ஆம் பிரதிவாதியின் கணவராவார்.

2) தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் என்னுடைய தந்தை எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் உள்ள சொத்துக்கள் என்வசம் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் தற்போது அந்த சொத்துக்கள் பிரதிவாதிகள் வசம் உள்ளது. உயில் எழுதி வைத்ததன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். உயில் எப்போது எழுதப்பட்டது என்றால் 21.08.2017 ல் எழுதப்பட்டது.

3) உயிலில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் 3ஆம் பிரதிவாதி பணம் கொடுத்து தான் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாங்கப்பட்ட போது வாதியாகிய நான் படித்துக்கொண்டிருந்தேன் என்றாலும் என்னுடைய படிப்பு செலவிற்கே 3ஆம் பிரதிவாதி தான் செலவு செய்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் வேலைக்கு சென்ற பிறகு என் தாய் தந்தையரை கவனிக்காமல் கும்பகோணத்திலேயே தங்கிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வேலைக்கு சென்று திருமணம் செய்து கொண்டு கும்பகோணத்திலேயே தங்கி விட்டேன் என்றாலும் ஊரில் நடந்த சுபதுக்க காரியங்களில் எதுவும் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4) தாய் தந்தையர் உடல் நிலை சரியில்லாத போது நான் கவனித்து கொள்ளவில்லை என்றாலும் 3ஆம் பிரதிவாதி தான் கவனித்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் என் தந்தையை ஏமாற்றி மிரட்டி உயில் எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யான

ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் 4 ஆம் பிரதிவாதியை தேவையில்லாமல் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.